# தேர்தல் ஆணைக்குழு

## பதவி வெற்றிடங்கள்

தேர்தல் ஆணைக்குழுவின் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பிரகாரம் வெற்றிடமாகியுள்ள அலுவலக உதவியாளர் சேவை பதவிகளுக்கு தற்போது மத்திய அரச சேவையில் பணியாற்றும் அலுவலக உதவியாளர் சேவை ஊழியர்களை நிரந்தரமாக இடமாற்றல் செய்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| தொடரிலக்கம் | அலுவலகம் | அலுவலக ஊழியர் சேவை பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | கொழும்பு மாவட்டம் | 02 |
| 02. | கொழும்பு நகரம் | 02 |
| 03. | கம்பஹா | 02 |
| 04. | மாத்தறை | 01 |
| 05. | கண்டி | 03 |
| 06. | நுவரெலியா | 02 |
| 07. | மாத்தளை | 01 |
| 08. | பதுளை | 02 |
| 09. | இரத்தினபுரி | 02 |
| 10. | கேகாலை | 01 |
| 11. | புத்தளம் | 02 |
| 12. | மொனராகலை | 01 |
| 13. | அனுராதபுரம் | 01 |
| 14. | பொலன்னறுவை | 01 |
| 15. | திருகோணமலை | 01 |
| 16. | வவுனியா | 02 |

**பொதுவான நிபந்தனைகள்,**

I. தற்போது மத்திய அரசாங்கத்தில் அலுவலக உதவியாளர் சேவை பதவியில் பணியாற்றுகின்ற ஊழியராக இருத்தல் வேண்டும்.

II. பதவிக்குரித்தான அலுவல்களை சிறப்பாக நிறைவேற்றவதற்குத் தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. அரச சேவையில் சிறப்பான நடத்தையுடன் பணியாற்றும் ஊழியராக இருத்தல் வேண்டும்.

IV. தாபனவிதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 1.1 இற்கமைய தேர்தல் ஆணைக்குழுவில் பணியாற்றும் அலுவலர்களுக்கு அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்கான உரித்துரிமை இல்லை.

V. விண்ணப்பதாரியின் குடும்ப அங்கத்தவரொருவர் அல்லது வாழ்க்கைத்துணையின் குடும்ப அங்கத்தவரொருவர் செயற்பாட்டு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிராத / ஈடுபடாத ஒருவராக இருத்தல் வேண்டும்.

VI. தேர்தல் காலப் பகுதியில் பொதுவான கடமை நேரத்திற்கு மேலதிகமாக வார இறுதி மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் கடமைகளை நிறைவேற்றல் வேண்டும்.

மேலதிக படிகள்,

தேர்தல் ஆணைக்குழுவுக்கு இடமாற்றல் கிடைத்தால் அலுவலரின் அடிப்படைச் அடிப்படைச் சம்பளத்தின் 25% இனை மேலதிக படியொன்றாக மாதாந்தம் செலுத்தப்படும்.

(ம.ப.பா. ⟶)

**<u>விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை:</u>**

அதற்கமைய, இடமாற்றல் பெற்று வருவதற்கு விரும்பும் அலுவலக உதவியாளர் சேவை ஊழியர்கள் அதற்காக அவர்களால் தயாரித்துக்கொள்ளப்பட்ட கோரிக்கை கடிதமொன்றை தனது நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் **தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, ராஜகிரிய** எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு கிடைக்கப்பெறும் கோரிக்கைகள் மற்றும் தனிப்பட்ட கோவைக்கமைய குறித்த அலுவலர்கள் தேர்தல் ஆணைக்குழுவில் பணியாற்றுவதற்குப் பொருத்தமானவரா என்பதனைப் பரீட்சித்ததன் பின்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு அறிவித்து இடமாற்றல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**<u>குறிப்பு</u>**

பதிலாள் இன்றி அல்லது பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படும் இடமாற்றல் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம்,**

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

2025 மார்ச் மாதம் 08 ஆம் திகதி
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய.